Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.146/18

**Deposition of P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | ராணி |
| Husband's Name | : | புண்ணியமூர்த்தி |
| Village | : | நம்பிவயல் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | இந்து |
| Age | : | **41/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.02.2021**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவக்கொல்லை நம்பிவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். **1** வது எதிரி என் கணவர் ஆவார். **2** வது எதிரி என் மாமியார் ஆவார். **3** வது எதிரி என் நாத்தனார் ஆவார். **4** வது எதிரி லீலா என் கணவரின் இரண்டாவது மனைவி ஆவார். **5** வது எதிரி லீலாவின் தந்தை ஆவார். கடந்த **17.06.2007** ம் தேதி அன்று எனக்கும் **1** வது எதிரிக்கம் ஊரணிபுரத்தில் உள்ள அம்சவள்ளி திருமண மண்டபத்தில் இருவீட்டார் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. திருமணமாகி பட்டுவிடுதியில் நானும் என் கணவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம். பிறகு என் கணவரின் வேலை நிமித்தமாக சென்னைக்கு நானும் என் கணவரும் சென்றோம். என் கணவர் சென்னையில் ஒரு வருடமாக பிபிஓ (கால்சென்டரில்) வேலை செய்தார். பின்னர் வேலையை விட்டுவிட்டார். அதனால் நான் ஆசிரியராகவும் டியூசன் வைத்தும் குடும்பம் நடத்தி வந்தோம். வருமானம் போதாததால் என் பெற்றோரிடம் வீட்டு செலவிற்கு பணம் வாங்கி வரச்சொல்லி என்னை தொந்தரவு செய்தார். அதன் பேரில் என் தகப்பனாரிடம் இருந்து பல முறை பணம் வாங்கி கொடுத்தேன். எனக்கு சீதனமாக கொடுத்த **15** பவுன் நகைகளை **1** வது எதிரி அடகு வைத்து அவரே செலவு செய்தார். அது சம்மந்தமாக நான் கேட்ட போது வேலை இல்லலாததால் நகைகளை அடகு வைத்தாக சொன்னார். **1** வது எதிரி என் மீது விவகாரத்து வழக்கினை சென்னையில் தொடர்ந்தார். மதுரை கிளையின் மூலம் மாறுதல் பெற்று பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து எனக்கு சாதகமாகவும் சேர்ந்து வாழ வேண்டும் என்றும் தீர்ப்பு ஆன பின்னர் அது தற்போது என் கணவர் மேல் முறையீடு செய்து அது தற்போது நிலுவையில் உள்ளது. எனக்கு சாதமாக தீர்ப்பு ஆன பின்னர் என் கணவரை தேடி பட்டுவிடுதிக்கு வந்த போது என் கணவர் இல்லை. என் மாமியாரும் இல்லை. அக்கம்பக்கத்தில் விசாரித்த போது அவர்கள் என் கணவருக்கு லீலா என்ற பெண்மணியை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார். இந்த தகவல் உனக்கு தெரியாதா என்று கேட்டார்கள். அதன் பிறகு என் தகப்பனாரும் என் சித்தப்பாவும் லீலா ஊரான குலசேந்திரபுரகுடிக்காடு என்ற ஊரில் **4** வது எதிரியின் தந்தை **5** வது எதிரியான கிருஷ்ணமூர்த்தியிடம் **2** வது திருமணம் நடந்த நாளான **05.12.2016** க்கு பின்னர் ஒரு வாரம் கழித்து சென்று கேட்டோம். அப்போது **5** வது எதிரி முதல் திருமணம் நடந்த விபரம் தெரிந்துதான் என் மகளை இரண்டாவதாக திருமணம் செய்து கொடுத்தேன் என்று சொல்லியுள்ளார். என் கணவரும் இரண்டாவது மனைவியும் எங்கே உள்ளார்கள் என்ற விபரத்தை **5** வது எதிரிகளிடம் கேட்ட போது உங்களிடம் எந்த

விபரமும் சொல்ல முடியாது என்று சொல்லி உங்களால் முடிந்ததை பார்த்து கொள்ளுங்கள் என்று சொல்லியுள்ளார்கள். பின்னர் உரிய ஆள்வரை உள்ள காவல் நிலையமான ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் ஒன்று கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.

**(**அரசு தரப்பின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**)**